2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) மாநிலங்கள் அவைத் தேர்தலின்போது தமிழக அமைச்சர் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. ஏ. கே. கோபாலனிடம் பேசியதாகச் சொல்லப்படுவது குறித்து.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: ஆன் எ பாயின்ட் ஆ.ஃப் ஆர்டர் சார், அண்மையிலே நடைபெற்ற ராஜ்ய சபைத் தேர்தலில் நம்முடைய அமைச்சர்களில் ஓர் அமைச்சர், இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. ஏ. கே. கோபாலன் M. P. அவர்களிடம்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு முன்னால் 'இந்த விதியின்கீழ் கொண்டு வருகிறேன்' என்பதைச் சொல்ல வேண்டும். நீங்கள் இப்பொழுது எந்த விதியின்கீழ் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருகிறீர்கள்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, இது பாயின்ட் ஆ.ஃப் ஆர்டர் அல்ல, பாயின்ட் ஆ.ஃப் இன்பர்மேஷன். நம்முடைய அமைச்சர் ஒருவர் திரு. ஏ. கே. கோபாலன் அவர்களிடம் பேசியதாகச் சொல்லப்படுகிறதே, பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்திருக்கிறதே, இது உண்மையா? ராஜ்ய சபைத் தேர்தலில் இப்படி ஓட் போட வேண்டுமென்று சொன்னது யார்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆ.ஃப் ஆர்டர் என்பதை எந்த உறுப்பினரும் எழுப்பலாம். பாயின்ட் ஆ.ஃப் இன்பர்மேஷன் என்று சொல்லும்போது, முதலில் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னர்தான் கொண்டுவர வேண்டும். இதற்கு நான் அனுமதி கொடுக்காதபோது எப்படிக் கொண்டுவர முடியும்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, இது முக்கியமான தகவல். இதில் அன்-பார்லிமென்டரி என்ன இருக்கிறது? இது நாட்டினுடைய பிரச்சினை. அமைச்சரவைக்கு இழுக்கு தேடக்கூடிய பிரச்சினை. நீங்கள் சொல்வது சரியல்ல........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பாயின்ட் ஆ.ஃப் ஆர்டர் என்று கொண்டுவந்த பாயின்ட் ஆ.ஃப் இன்பர்மேஷனுக்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன் என்று சொன்னபோது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து, 'நீங்கள் சொல்வது தவறானது' என்று சொல்வது சரியல்ல. தலைவருடைய தீர்ப்பு தவறாக இருக்கிறது என்று சொல்வது சரியல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இது உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது. பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று கேட்கிறபோது அப்படிக் கேட்க உரிமை கொடுக்கமாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? அதுவும் எல்லாப் பேப்பர்களிலும் வந்துள்ள ஒரு செய்தியைப் பற்றியது. அந்தச் செய்தி சரியானது என்றோ, தவறானது என்றோ உங்கள் மந்திரிகளில் யாரும் இதுவரை மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "உங்களுடைய மந்திரி" என்று சொல்வதும் சரியல்ல. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கும் அவர்கள்தான் அமைச்சர்கள். எல்லோருக்கும் அமைச்சர்கள். ஆகவே நம்முடைய அமைச்சர்கள் என்று சொல்ல வேண்டும்.

இரண்டாவது, நமக்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளைப் பின்பற்றி சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி நடத்தினால்தான் ஒழுங்காக நடத்த முடியும். குழப்பங்கள்

இல்லாமல் நடத்த முடியும். அப்படி இதுவரை ஒழுங்காகச் செய்து வருகிறோம். நம்முடைய விதிமுறைகளின்படி சட்டமன்றத்தைப் பேரவைத் தலைவர் நடத்திச் செல்ல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இப்போதுள்ள பிரச்சினை திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் முதலில் 'ஒரு ஒழுங்குப் பிரச்சினை' என்றார்கள். நான் 'எந்த விதியின் கீழ்க்கொண்டு வருகிறீர்கள்?' என்று கேட்டேன். அப்படிக் கேட்க பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அது 'பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' என்றார்கள். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் பேரவைத் தலைவரின் அனுமதியுடன் தான் கொண்டுவர முடியும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லாது முதலிலேயே பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று கோரியிருந்தால் நான் அனுமதிகூட வழங்கியிருக்க முடியும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, அது எந்த விதியின்கீழ் என்று நான் கேட்க, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொன்ன காரணத்தினால் அதற்கு நான் அனுமதி தரவில்லை என்று தீர்ப்பு அளித்துவிட்டேன். அந்தத் தீர்ப்பு சரியல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது இந்த மன்றத்தின் கண்ணியத்தையே பாதிப்பதாக இருக்கிறது. நான் தீர்ப்புக் கொடுத்துவிட்ட பிறகு அந்தப் பிரச்சினையை எழுப்பு வதற்கே யாருக்கும் உரிமை இல்லை.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தாங்கள் குறிப்பிட்டது போன்று பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றாலும் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் கொண்டுவர முடியும்.

அதுவும் தேர்தல் என்பது—ராஜ்ய சபா தேர்தலாக இருந்தாலும், மேலவைத் தேர்தலாக இருந்தாலும் அது கட்சிகளின் பிரச்சினையே தவிர அரசின் பிரச்சினை அல்ல. தேர்தல் சம்பந்தமாகக் கட்சிகள் கலந்து கொள்கிறமுறை, கேட்டுக்கொள்கிற முறை, வோட்டு வாங்கிக்கொள்கிற முறை ஆகியவற்றுக்கெல்லாம் கட்சிகளின் தலைவர்களே பொறுப்பு விளக்கம் கொடுப்பதோ, விளக்கம் பெறுவதோ கட்சிகளுக்குடபட்ட காரியம். இந்த அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த மன்றத்திற்குள் தீரவேண்டிய பிரச்சினையும் அல்ல. பரிசீலிக்க வேண்டிய விஷயமும் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: என்னுடைய அமைச்சர், நம்முடைய அமைச்சர், தமிழக அமைச்சர், எங்களுடைய அருமை நண்பர்கள் தலைசிறந்த கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு வைத்திருப்பதை எல்லாப் பத்திரிகை செய்திகளும் வெளியிட்டிருக்கின்றன. இதுவரை அப்படி யாரும் தொடர்பு கொள்ளவில்லை என்கிற மறுப்பும் வரவில்லை. அந்தச் செய்தி ஆதாரபூர்வமானதா, ஆதாரமற்றதா என்கிற விளக்கம் கொடுக்கப் படவில்லை. இந்த அமைச்சரவையின் நன்மைக்காகவே இதுபற்றி விளக்கம் கேட்கிறோம். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே கேட்கிறோம். இதற்கு அனுமதி வழங்குவதில் தவறு என்ன இருக்கிறது?

(இ) எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்பொழுதும் தகவல் கோர உள்ள உரிமை குறித்து.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. I am not questioning your ruling. I know you are a lawyer with some experience. You have given a correct ruling that nobody can raise a point of order and then turn it into a point of information. But, Sir, coming to a later stage, the Hon. the Leader of the Opposition has got a right to get up at any point of time or moment to intervene and ask for information. He was careful enough to